# மாண்பு காத்த எதிர்க்கட்சித் தலைவர் மாண்பைக் கெடுத்த முதலமைச்சர்!

சுதந்திர இந்தியாவில் ஒரு மாநிலக் கட்சி, அந்த மாநிலத்தில் ஆட்சி அமைக்க முடியும் என்ற வரலாற்றைப் படைத்தது பேரறிஞர் அண்ணா தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம். முதலமைச்சர் அண்ணா அவர்கள் காவல்துறை (உள்துறை)க்கும் பொறுப்பு வகித்தார். அதற்கு முன், காங்கிரஸ் முதலமைச்சரான காமராஜர் ஆட்சிக் காலத்தில் பக்தவத்சலம் போலீஸ் இலாகா அமைச்சராக இருந்தார். அதன்பிறகு, பக்தவத்சலம் ஆட்சிக் காலத்தில் போலீஸ் இலாகாவுக்கு கக்கன் அமைச்சராக இருந்தார்.

தி.மு.க. ஆட்சியில் முதலமைச்சர் அண்ணா அவர்களே காவல்துறையை ஏற்றுக் கொண்டது போல, அவரது மறைவுக்குப் பிறகு முதலமைச்சரான கலைஞரும் காவல்துறைக்குப் பொறுப்பு வகித்தார். அ.தி.மு.க. ஆட்சியிலும் யாரெல்லாம் முதலமைச்சர்களாக இருந்தார்களோ அவர்களே காவல் துறைக்குப் பொறுப்பு வகித்தனர். திராவிட மாடல் ஆட்சியின் முதலமைச்சரான கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காவல்துறைக்குப் பொறுப்பு வகித்தார்.

**சட்டமன்றத்தில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பிறகு, ஒவ்வொரு துறைக்கான மானியக் கோரிக்கை மீதான விவாதங்கள் நடைபெறும். அதில் ஆளுங்கட்சி-எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவார்கள். அவர்கள் வைக்கின்ற கோரிக்கைகள், குற்றச்சாட்டுகள், எழுப்புகின்ற கேள்விகள் ஆகியவற்றுக்கு காவல் துறைக்குப் பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் பதிலுரை அளித்து, காவல்துறையினரின் நலனுக்கானப் புதிய அறிவிப்புகளை வெளியிடுவார்கள். பேரறிஞர் அண்ணா காலம் முதல் கழகத் தலைவர் திராவிட நாயகர் ஆட்சிக்காலம் வரை இதுதான் நடைமுறை.**

பெரும்பாலும், காவல்துறை மானியக் கோரிக்கைதான் அந்த சட்டமன்றக் கூட்டத்தொடரின் இறுதிக்கட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படும். உறுப்பினர்களின் உரை, எதிர்க்கட்சித் தலைவர் உரை ஆகியவற்றுக்குப் பிறகு முதலமைச்சர் பதிலளிக்கும் நாளுடன் கூட்டத் தொடர் நிறைவடையும். முதல் நாள் எதிர்க்கட்சித் தலைவர் பேசினால், மறுநாள் முதலமைச்சர் பதிலளிப்பார்.

த.வெ.க ஆட்சியில் எல்லாமே தாறுமாறுதான். சட்டமன்றக் கூட்டத்தொடரில் சில துறைகளின் மானியக் கோரிக்கைகள் மிச்சமிருந்த நிலை யிலேயே, அவற்றுக்கு முன்னதாக காவல்துறை மானியக் கோரிக்கை இடம்பெற்றுவிட்டது. அதில் எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றிய பிறகு, 3 நாட்கள் விடுமுறைக்குப் பின்னர்தான் முதலமைச்சர் பதில் சொல்வது போல, பேரவை நிகழ்வுகள் திட்டமிடப் பட்டன. எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செப்டம்பர் 3ஆம் நாள் காவல்துறை மானியக் கோரிக்கையின் மீது உரையாற்றினார்.

**தமிழ்நாட்டில் கடந்த 100 நாட்களில் சட்டம்-ஒழுங்கு எந்தளவுக்கு சீர்குலைந்துள்ளது என்பதை ஆதாரங்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துரைத்தார். த.வெ.க சட்டமன்ற உறுப்பினர்கள் மீதும், த.வெ.க. நிர்வாகிகள் மீதும் த.வெ.க.வைச் சேர்ந்தவர்களே பாலியல் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்திருப்பதை பேரவையில் வெளிப்படுத்தினார். தமிழ்நாட்டில் நாள்தோறும் தொடர்ச்சியாக நடந்து வரும் கொலைகளை சுட்டிக்காட்டி, "கறிக்கடையில் கூட இந்த அளவுக்கு வெட்டுவதில்லை" என்றார். 116 நாட்களில் 200க்கும் அதிகமான கொலைகள் நடந்திருப்பதைப் பட்டியலிட்டார்.**

எதிர்க்கட்சித் தலைவர் பேசியது காவல்துறை மானியக் கோரிக்கையின் மீதுதான். ஆனால், அந்தத் துறைக்குப் பதிலளிக்கும் முதலமைச்சர் எதுவும் பேசவில்லை. பிற துறை அமைச்சர்கள் குறுக்கிட்டுப் பேசினார்கள். சத்தம் போட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவர் மிகவும் நிதானமாக, "தொலைக்காட்சித் தொடரில் இவருக்குப் பதில் அவர் என்று போடுவது போல பேசுகிறீர்கள். நான் பேசுவது காவல்துறை மானியக் கோரிக்கை விவாதத்தில்தான். நீர்ப் பாசனத் துறை, பொதுப்பணித்துறை விவாதத்தில் அல்ல. முதலமைச்சருக்குப் பதிலளிக்க 3 நாட்கள் அவகாசம் உள்ளது. நன்றாகத் தயார் செய்து கொண்டு வந்த பதில் தரட்டும். குட்டிக்கதைகள், விதண்டா வாதங்கள் போன்ற திசைதிருப்பும் வேலைகள் வேண்டாம்" என்று தெளிவாகவே குறிப்பிட்டார்.

முதலமைச்சர் விஜய் எழுந்து, "எல்லாக் கேள்விகளுக்கும் பதிலளிக்கிறேன். ஆனால் யாரும் அவையை விட்டு ஓடக்கூடாது என உத்தரவாதம் தர வேண்டும்" என்று பேரவைத் தலைவரிடம் சொல்லிவிட்டு, அடுத்த நொடியே அவர் அந்த அவையை விட்டு வெளியேறி விட்டார். அது முதலமைச்சரின் அலுவல் சார்ந்த உரிமை என்றுகூட எடுத்துக் கொள்ளலாம். ஆனால், **யாரும் ஓடக்கூடாது என்று உத்தரவாதம் கேட்ட முதலமைச்சர், தனது பதிலுரையில் எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய 15 கேள்விகளில் எதற்காவது பதில் கொடுத்தாரா? இல்லை.. இல்லை.. இல்லவே இல்லை.**

தி.மு.க. ஆட்சியில் முறைகேடுகள் நடந்ததாகச் சொல்லி, அது தொடர்பான கோப்புகள் தனது மேசையில் இருப்பதாக ஏற்கனவே சொல்லியிருந்த முதலமைச்சர், அந்த கோப்புகளின் விவரங்களை 'ஓப்பன்' செய்வதாக சொன்னார். ஆனால், அமலாக்கத்துறை தொடர்ந்த வழக்கில் உள்ள குற்றச்சாட்டுகளை மட்டுமே



**கோவி.லெனின்**
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

படித்தார். குற்றச்சாட்டுகளே தீர்ப்புகளாகி விடுமா? அதுவும் இணைய தளங்களிலேயே வெளியிடப்பட்ட விவரங்களை வெளியிடுவதுதான் கோப்புகளைத் திறக்கிற இலட்சணமா? இந்த அளவுக்குத் தான் விஜய்க்கு சட்ட நடைமுறை தெரிந்திருக்கிறதா? என சட்டமன்ற நிகழ்வுகளின் நேரலையைப் பார்த்த பொதுமக்களுக்கு சந்தேகம் வந்தது.

அதற்கு மேல் தனக்கு எதுவும் தெரியாது என்பதை உறுதி செய்வது போல, **காவல்துறை மானியக் கோரிக்கைக்கு தொடர்பே இல்லாத, 50 ஆண்டுகளுக்கு முந்தைய மிசா கைதுகள், சர்க்காரியா கமிஷன் விசாரணை பற்றி யாரோ எழுதிக் கொடுத்ததை அப்படியே வாந்தி எடுப்பது போலமுதலமைச்சர்பேசத்தொடங்கிவிட்டார். வாந்தி எடுத்தால் சத்தம் அதிகமாகவும், சகிக்க முடியாததாகவும் தான் இருக்கும். விஜய்யின் பேச்சும் அப்படித்தான் இருந்தது.**

தி.மு.க.வுக்கு எதிராக 50 ஆண்டுகளாக பரப்பப்படும் பொய்களையும் அவதூறுகளையுமே விஜய்யும் சட்டமன்றத்தில் பேசினார். தனது பொதுவாழ்க்கையையே, எமர்ஜென்சி காலத்து மிசா சிறைவாச சித்திரவதைகளை எதிர்கொண்ட ஜனநாயகப் போராளியாகத் தொடங்கி, **தியாகத் தழும்பேறிய தலைவரான கழகத் தலைவர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களை உடல்ரீதியாக இழிவு செய்யும் விதத்தில் விஜய் செய்த சைகை, முதலமைச்சர் என்ற மதிப்புமிகுந்த பொறுப்பையே இழிவுபடுத்தும் விதத்தில்தான் இருந்தது.** எத்தகைய மாண்புமிக்க தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இப்படியொரு முதலமைச்சரா என்று எல்லாருமே முகம் சுழிக்கும் வகையில் விஜய் நடந்து கொண்டார்.

சர்க்காரியா கமிஷன் அறிக்கை பற்றிய அடிப்படை அறிவு கூட இல்லாமல் முத்தமிழறிஞர் கலைஞர், முரசொலி மாறன் ஆகியோர் மீதும் அவதூறு வாந்தி எடுத்தார் விஜய். காவல்துறை மானியக் கோரிக்கைக்கு சம்பந்தமில்லாமல் முதலமைச்சர் பேசுவதையும், அவருடைய குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மைக்குமாறானவை - வரலாற்றைத் திரிப்பவை என்பதை எடுத்துரைக்கும் வாய்ப்புக்காக தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் எழுந்து நின்றனர். தி.மு.க தரப்பில் பதிலளித்துப் பேசுவதற்கு வாய்ப்பை மறுத்து, ஜனநாயகத்தின் வாய்க்குப் பூட்டுப் போட்டுவிட்டார் பேரவைத் தலைவர்.

**ஜனநாயக உரிமை மறுக்கப்பட்ட பேரவையிலிருந்து வெளிநடப்பு செய்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஊடகத்தினரை சந்தித்துப் பேசினார். தி.மு.க. எழுப்பிய எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லாமல் விஜய் தன் போக்கில் பேசியதையும், எழுதிக் கொடுத்தவற்றை ஒப்புவித்து, ரீல்ஸ் போடுவதில் மட்டுமே கவனம் செலுத்தியதையும் வெளிப்படையாக எடுத்துரைத்த எதிர்க்கட்சித் தலைவர், 100 நாட்களிலேயே த.வெ.க. ஆட்சியில் ஊழலுக்கான அடித்தளம் போடப்பட்டிருப்பதை பெயர்களைக் குறிப்பிட்டே குற்றம் சாட்டினார்.** இதுதான் தி.மு.க. கடைப்பிடிக்கும் சட்டமன்ற மாண்பு. அந்த மாண்பைக் கெடுக்கும் வகையிலேயே த.வெ.க. அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

கலைஞர் ஆட்சிக்காலத்தில் காவல் துறை மானியக் கோரிக்கை மீதான பதிலுரை என்றால் காவல்துறையில் பணியாற்றுவோர் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருப்பார்கள். ஊடகத்தினர் ஆர்வத்துடன் சட்டமன்ற செய்திகளை சேகரிப்பார்கள்.

காவல்துறை என்பது நல்லவர்களுக்கு நண்பனாகவும், தீயவர்களுக்கு சிம்ம சொப்பனமாகவும் செயல்பட வேண்டும் என்பதையும், சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதில் அரசியல் தலையீடின்றி நடுநிலையாக செயல்பட வேண்டும் என்பதை முதலமைச்சர் கலைஞர் வலியுறுத்துவார். காவல் மரணங்களால் மனித உரிமைகள் பறிக்கப்படுவதாக எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு, உரிய முறையில் பொறுப்பேற்று பதிலளிப்பார். அதன்பிறகு காவல்துறைக்கான புதிய அறிவிப்புகளை வெளியிடுவார். முதன்முதலாக போலீஸ் கமிஷன், காவலர்களுக்கான வீட்டு வசதி வாரியம், காவலர் குறைத் தீர்ப்பு நடவடிக்கைகள் எனப் பலவும் கலைஞர் ஆட்சியின் காவல்துறை மானியக் கோரிக்கையின் மைல்கற்கள்.

**கலைஞர் வழியில் திராவிட மாடல் நாயகரான கழகத் தலைவர் ஆட்சியிலும் காவல்துறை மானியக் கோரிக்கையில் எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளைப் புறக்கணிக்காமல், அவற்றுக்கு உரிய விளக்கங்களையும், எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் விரிவாகத் தெரிவித்து, காவலர்கள் நலனுக்கான அறிவிப்புகளை வெளியிடுவார்.**

விஜய் ஆட்சியில் காவலர்கள் தங்கள் துறை தொடர்பான மானியக் கோரிக்கைகளில் என்னென்ன அறிவிப்புகள் வெளியாகும் என்று எதிர்பார்ப்புடன் இருந்தனர். எதையெதையோ வாந்தி எடுத்து, சட்டமன்ற மாண்பினைக் கெடுத்த விஜய், காவலர்கள் நலனுக்காக பெரிதாக எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை.

**வாக்களித்த மக்களைப் போலவே, காவல்துறையினரும் த.வெ.க. அரசிடம் எதிர்பார்த்து, ஏமாந்து நிற்கின்றனர்.**

---

### நீட் தேர்வின் அச்சம் காரணமாக

## பல்லாவரம் மாணவர் சாய் அபினவ் தற்கொலை!

### எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப்.10-

பல்லாவரத்தைச் சேர்ந்த சாய் அபினவ் என்ற மாணவர் நீட் தேர்வின் அச்சம் காரணமாக தற்கொலை செய்து கொண்டதற்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த அவரது சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

நீட் தேர்வின் அச்சம் காரணமாக பல்லாவரத்தைச் சேர்ந்த சாய் அபினவ் என்கிற மாணவர் தற்கொலை செய்துகொண்ட செய்தி அறிந்து அதிர்ச்சியுற்றேன்.

ஏற்கெனவே இரண்டு முறை நீட் தேர்வு எழுதி இருந்த நிலையில், மீண்டும் கோச்சிங் சென்டரில் இணைந்து நீட் தேர்வுக்குத் தயாராகி வந்த மாணவர் சாய் அபினவ், இந்த விபரீத முடிவை எடுத்துள்ளார்.

ஈடு செய்ய முடியாத இழப்பை எதிர்கொண்டு நிற்கும் மாணவர் சாய் அபினவின் பெற்றோருக்கு என் ஆறுதலையும் இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீட் ஆட்கொல்லித் தேர்வுக்கு இன்னும் எத்தனை குழந்தைகளை இழப்பது???

குளறுபடிகளும் மோசடிகளும் நிறைந்த நீட் தேர்வை ரத்து செய்வதற்காக கழக அரசு மேற்கொண்ட சட்டப்போராட்டங்களை, இன்றைய ஆட்சியாளர்கள் இன்னும் வேகத்துடன் மேற்கொள்ள வேண்டும்.

நீட் தேர்வை ரத்து செய்ய ஒன்றிய அரசிற்கு உரிய அழுத்தம் கொடுக்க வேண்டும். #BanNEET

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்ட நான்கு சட்டமன்றத் தொகுதி வாரியாக

## மறுசீரமைப்பு பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டக் கழக செயலாளர் க.தேவராஜி அறிவிப்பு!

*திருப்பத்தூர், செப்.10*

திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்ட வாணியம்பாடி, ஆம்பூர், ஜோலார்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதியில் நகர, ஒன்றிய, பேரூர் கழகங்கள் மற்றும் வார்டு, கிளைக்கழகங்கள் மறுசீரமைப்பு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் கீழ்க்கண்ட விவரப்படி நடைபெற உள்ளது.



இதுகுறித்து மாவட்டச் செயலாளர் க.தேவராஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

10.09.2026 வியாழக்கிழமை வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி காலை 11.00 மணியளவில், மாவட்டக் கழக அலுவலகம், வாணியம்பாடி.

ஆம்பூர் சட்டமன்ற தொகுதி மாலை 4.00 மணியளவில், The Park Regency, பைபாஸ் ரோடு, ஆம்பூர்.

11.09.2026 வெள்ளிக்கிழமை ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி, காலை 11.00 மணியளவில், தனலட்சுமி திருமண மண்டபம், சாலைநகர்.

திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி மாலை 4.00 மணியளவில், SRK கன்வென்சன் ஹால், திருப்பத்தூர்.

ஆகவே மேற்கண்ட கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகி கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

**ஆர்ப்பாட்டம்!**

12.9.2026 சனியன்று முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து திருப்பத்தூரில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டம் முழுவதுமிருந்து கழக முன்னணியினர் பங்கேற்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக மறு சீரமைப்பு தொடர்பாக மதுரை மாநகர் மாவட்ட கழக செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் மா.ஒச்சுபாலு தலைமையில் தலைமைக் கழகப் பிரதிநிதிகள் பி.டி.சி. செல்வராஜ், மூத்த வழக்கறிஞர் ரவீந்திரன், மாநில உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.ஜெயராம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோபாலகிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செளந்தர்ராஜன், தீர்மானக்குழு அக்ரி கணேசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றதில் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி சிறப்புரையாற்றினார். மேலும் இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள் மூவேந்திரன், சின்னம்மாள், ராகவன், முருகவேல், பி.டி.மணிமாறன், முத்து கணேசன், செய்யது அபுதாஹிர், வைகை பரமன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் பங்கேற்றனர்.



கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி அவர்களின் ஆலோசனையின் படி மதுரை வடக்கு மாவட்ட கழக மறு சீராய்வு குறித்த கழக செயல் வீரர்கள் கூட்டம் அவைத் தலைவர் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணி தலைமையில் வழக்கறிஞர் ரவீந்திரன் முன்னிலையில் நடைபெற்றதில் தலைமை கழகப் பிரதிநிதி பி.டி.சி செல்வராஜ் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட கழக நிர்வாகிகள் சோமசுந்தர பாண்டியன், ஆசைக்கண்ணன், ரோகினி பொம்மை தேவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கரு.தியாகராஜன், தனச்செல்வம், பாலாஜி, சேகர், வடிவேல் முருகன், தலைமைக் கழக வழக்கறிஞர் கலாநிதி, மாநில நிர்வாகிகள் நேரு பாண்டியன், கணேசன், கலை கார்த்திகேயன், பாலா, அக்ரி கணேசன், முன்னாள் எம்.எல்.ஏ. தமிழரசன், பொறுப்பாளர் சுப காசம்பத் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் கலந்து கொண்டனர்.